# வாழ்க நீ எம்மான்!

நீரின்றி அமையாதுலகு,
நெறிதனைச் சொன்னான்;
வள்ளுவப் பெருந்தகை!
நெறியுடன் சொல்வார்,
எங்கள் சீர் **சாமுவேல்**
**தேவநேசன்** அன்னான்!

கையில் குவளை கடுகி எடுத்து,
பையத் தோழமை அணைத்து,
உண்ணீர் உண்ணீர் என்றே;
ஊட்டியும் மகிழ்ந்து, நாளும்,
தலையும் சாய்ந்து வீழ,
தன்னிலை தன்னை மறந்து,

வீழ்ந்து வீழ்ந்து நாளும்;
எழுந்திடும் போது ஆகுமோ,
வெற்றியின் படியில் பயணம்?
வாழ்க்கை என்பதே என்றும்,
துய்க்கும் இன்பத்தால் துவள,
எப்படித் தேரும் வெற்றியே?
01-03-3022